Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 07 ( 23 - 09 - 1991 ) திங்கட்கிழமை ஓசை: 217

## க. பொ. த. விசேட பரீட்சை

1990ஆம் ஆண்டிற்குரிய க. பொ. த. (சாதாரணதர) பரீட்சைக்கு தோற்ற முடியாமல்போன வடக்கு-கிழக்கு பரீட்சார்த்திகளுக்கு வரும் டிசம்பர் மாதம் விசேட பரீட்சைகள் நடத்தவிருப்பதாக பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுனி தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் கொழும்பில் இவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த டிசம்பரில் நடைபெற்ற (சாதாரண) பரீட்சைக்குத் தோற்ற முடியாமல்போன வடக்கு-கிழக்கு பரீட்சார்த்திகளுக்கென டிசம்பரில் நடைபெறும் பரீட்சையுடன் விசேட பரீட்சை ஒன்றும் நடத்தப்படும் எனகுறிப்பிட்டுள்ளார். அத்துடன் திட்டமிட்டபடி வரும் டிசம்பரில் 1991ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த. (சாதாரணதரம்) பரீட்சை டிசம்பர் 9 ஆம் திகதியிலிருந்து 18ஆம் திகதி வரைக்கும் நடைபெறும் என்றும் இப் பரீட்சை முன்கூட்டி நடத்தப்படமாட்டாதென்றும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(4ஆம்பக்கம் பார்க்க)

### இ. தொ. காங்கிரஸ் சார்பில்

# தமிழர் பிரச்சினையின் தீர்வுக்கு தொண்டமானின் யோசனைகள்

## மாகாண அரசுக்கு கூடிய அதிகாரங்கள் சிபார்சு

(யாழ்ப்பாணம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், பிரேமதாசா அரசின்மூத்த அமைச்சர்களில் ஒருவருமான திரு. தொண்டமான், தலைவர் பிரபாகரனுக்குசமீபத்தில் அனுப்பி வைத்த கடிதம் ஒன்றில் தமிழீழ மக்களின் தேசிய பிரச்சினை சம்பந்தமாக சில யோசனைகளை முன்வைத்திருக்கிறார்.



பழைய மாகாணசபைக்கு புதியவடிவம் கொடுப்பதாக அமையப் பெற்றிருக்கும் இத் தீர்வுத் திட்டத்தில் வட கிழக்கு மாகாண நிர்வாகத்திற்கு கூடிய ஆட்சி அதிகாரங்கள் சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றன காணி உரிமைப்பாடு, காவல்துறை, பொருளாதார அபிவிருத்தி, பொது நிர்வாகம், கல்வி போன்ற துறைகளுக்கு கூடிய அதிகாரம் வழங்கப்படுவதாகக் கூறப்படும் இத் திட்டம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் உருவாக்கப்பட்டது என்பதை திரு. தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

"அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீட்டின் அடிப்படையிலேயே ஒரு நிரந்தர தீர்வை சிந்திக்க முடியும்" எனக் குறிப்பிடும் திரு. தொண்டமான், இக்கருத்துக்கள் "அரசாங்கசார்பற்றவையாக கருதப்பட வேண்டும்" எனவும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இ. தொ. காங்கிரஸ்சார்பில்முன் வைக்கப்பட்டிருக்கும் திரு. தொண்டமானின் யோசனைகள் சில குறிப்பிட்ட துறைகளின் அதிகாரம், செயற்பாடுகள் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுகிறதே தவிர, ஒட்டுமொத்தமான ஒரு தீர்வுத் திட்டமாக அமையவில்லை. அத்துடன் 'மாகாண அரசாங்கத்தின்' சட்டமியற்று, நிறைவேற்று, நீதிபரிபாலன அதிகாரங்கள் எதுவும் திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை. அதற்கும் மேலாக மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கத்திற்கும் [illegible]

## சிறிலங்காவின் ரோந்து படகு கடற் புலிகளால் மூழ்கடிப்பு

### அதிகாரி உட்பட 6 கடற்படையினர் பலி

தீவகப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் ரோந்து சென்ற அதிவேக இயந்திரப் படகொன்று கடற்புலிகளின் அதிரடித் தாக்குதலால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் படகில் பயணஞ் செய்த உயரதிகாரி உட்பட ஆறு கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றிரவு 6-20 மணியளவில் நடைபெற்றுள்ளது. நயினாதீவில் இருந்து காரைநகர் நோக்கிச் சென்ற 50 கலிபர்த் துப்பாக்கி பொருத்தப்பட்ட அதிவேக இயந்திரப்படகே இத்தாக்குதலில் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

## குற்றப் பிரேரணை இருக்கும் போதே பாராளுமன்றத்தை கலைக்கலாம்

(கொழும்பு)

அரசியல் குற்றப் பிரேரணை இருக்கும்போதே பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும் என முன்னணி யாப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் அரசியல் யாப்பின் பிரகாரம் செயலாற்று அதிகாரம் கொண்டவர் ஜனாதிபதியே அதி உயர் அதிகாரம் கொண்டவர் என்றும், ஸ்திரப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து அரசாங்கத் திணைக்களங்களுக்கு தேவையான நிதியை ஆறுமாத காலத்திற்கு பெற்றுக் கொடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதால் பாராளுமன்றம் இல்லாமலேயே ஜனாதிபதியால் செயற்பட முடியும் என்றும் அந்த நிபுணர்கள் தெரிவித்திருப்பதாக தெரிகிறது.

## வீரவணக்கம்

## இட்டு சுவிசில்?

(கொழும்பு)

பிரான்சில் தங்கியிருந்த யாழ். மாவட்டத்தின் முன்னாள் தளபதி கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார்) சுவிற்சலாந்து நாட்டிற்குச் சென்றுள்ளதாகவும், அங்கு அரசியல் தஞ்சம் கோரவிருப்பதாகவும் 'லங்கா புவத்' செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஊர்காவல் படை புலி

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கடமையிலீடுபட்டிருந்த ஊர்காவல் படையைச் சேர்ந்த இஸ்ஜாஸ் (19) என்பவர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார். இவரது மரணம் பற்றிய விபரத்தைபொலிசார் தெரிவிக்கவில்லை.

றன காணி உரிமைப்பாடு, காவல்துறை, பொருளாதார அபிவிருத்தி, பொது நிர்வாகம், கல்வி போன்ற துறைகளுக்கு கூடிய அதிகாரம் வழங்கப்படுவதாகக் கூறப்படும் இத் திட்டம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் உருவாக்கப்பட்டது என்பதை திரு. தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.



"அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீட்டின் அடிப்படையிலேயே ஒரு நிரந்தர தீர்வை சிந்திக்க முடியும்" எனக் குறிப்பிடும் திரு. தொண்டமான், இக்கருத்துக்கள் "அரசாங்கசார்பற்றவையாக கருதப்பட வேண்டும்" எனவும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இ. தொ. காங்கிரஸ்சார்பில்முன் வைக்கப்பட்டிருக்கும் திரு. தொண்டமானின் யோசனைகள் சில குறிப்பிட்ட துறைகளின் அதிகாரம், செயற்பாடுகள் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுகிறதே தவிர, ஒட்டுமொத்தமான ஒரு தீர்வுத் திட்டமாக அமையவில்லை. அத்துடன் 'மாகாண அரசாங்கத்தின்' சட்டமியற்று, நிறைவேற்று, நீதிபரிபாலன அதிகாரங்கள் எதுவும் திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை. அதற்கும் மேலாக மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கத்திற்குமமத்தியிலான அதிகாரப் பங்கீடுபற்றியவிபரங்கள் எதுவும்தரப்படவில்லை.

இந்த யோசனைகளில் மாகாண சபைக்குப் பதிலாக மாகாண அரசாங்கம் என்ற சொல் பிரயோகிக்கப்படுகிறது. ஆயினும் இந்த மாகாண அரசாங்கம் வட கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாட்டை அங்கீகரிக்கிறதா, இல்லையா என்பது தெளிவாக விளக்கப்படவில்லை.

திரு. தொண்டமான் தெரிவித்த யோசனைகள் வருமாறு:

**காணி**

★ மாகாணத்தினுள் இருக்கும் அரசாங்க காணிகள் மாகாண சபையின் உடைமையாகும்.

★ மாகாணசபையே அரசாங்க காணிகளை நிர்வகிக்கும், சட்டுப்படுத்தும், பயன்படுத்தும்.

★ மாகாணசபை அரசாங்க காணிகளை விற்கவும், குத்தகைக்கு விடவும் அதிகாரமுடையதாகும்.

★ மாகாணத்தினுள் இருக்கும் நிலம் மத்திய அரசின் ஒதுக்கப்பட்ட தேவையொன்றிற்கு மாகாணசபையின் சம்மதத்துடன் பயன்படுத்தப்படலாம்.

★ சுதந்திரம் பெற்ற காலத்தின் இன விகிதாசாரத்தைக் கருத்தில்கொண்டு நீர்பாசனத் திட்டங்களின்கீழ் குடியமர்பவர்களைத் தீர்மானிக்கும் பொறுப்பு மாகாணசபையினுடையதாகும்.

★ மாகாணசபைமாகாணக்காணிஆணைக்குழுவைநியமிக்கும் உரித்துடையது. மாகாண காணி ஆணைக்குழுவே மாகாணத்தினுள் காணிப்பயன்பாடு பற்றிய கொள்கையை வகுக்கும் ஆணைக்குழுவின் உறுப்பினர் தெரிவும், வடிவமைப்பும்மாகாண அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படுவதாகும்.

**மாகாண பொலிஸ் படை**

★ வட-கிழக்கு மாகாணத்துக்கான மாகாண பொலிஸ் படையை ஸ்தாபிப்பதற்கு மாகாண அரசுக்கு அதிகாரம் உண்டு.

★ மாகாண மட்டத்தில் பொலிஸ்படையில் பதவி உயர்வு வழங்கப்படும். ஐ.ஜி.பி. (பொலிஸ் மா அதிபர்) டி. ஐ. ஜி. ஜி, எஸ். எஸ். பி. பி, ஸ்.பி.பி, ஏ. எஸ். பி. பி ஆகியோரையும் அல்லது ஏனைய தரங்களில் சேர்க்கப்படுவோரையும் கொண்டதாக வட-கிழக்கு மாகாணத்துக்கான மாகாண பொலிஸ் படை அமையும்.

★ மாகாணத்தின் சனத்தொகை, பிரதேசம், பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மாகாண அரசு மாகாணப் பொலிஸ்படையின் ஆளணி எண்ணிக்கையை நிர்ணயிக்கும்.

★ ஆரம்பத்தில் உடனடியாக 10,000 பேர் பொலிஸ் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பொலிஸ்படைக்கு ஆள் சேர்க்கும்பணி மூன்று மாதங்களுக்குள் பூர்த்தியாக்கப்படவேண்டும்.

★ மாகாண இன விகிதாசார அடிப்படையில் பொலிஸ் படை அமையும்.

★ மாகாணம் முழுவதற்குமாக ஒரு பொலிஸ் படை அமையும். ரிசேவ் பொலிஸ் தொண்டர்படை அல்லது பொலிஸ் அமைப்பில் வேறெந்த அலகாக இருந்தாலும் அது ஒரு பொலிஸ் அமைப்பின் கீழ் இயங்கும்.

★ மாகாணப் பொலிஸ் உத்தியோகத்தர்களின் இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்று நடவடிக்கை, வெற்றிடங்களுக்கு ஆள் சேர்த்தல் என்பன மாகாண அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டவையாகும்.

★ மாகாணத்தில் கடமையாற்றும் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொலிஸ்மா அதிபரின் (ஐ ஜி பி) பணிப்புரை வழிநடத்தலின் படி கடமையாற்றுவார்கள்.

★ மாகாணப் பொலிஸ்படை, ஐ.ஜி.பி. மாகாண முதலமைச்சருக்குப் பொறுப்பாகவும் அவரின் கட்டுப்பாட்டின்கீழும் கடமையாற்ற வேண்டும்.

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகளில் இணைத்துக் கொள்ளல்**

★ நாட்டின் பொலிஸ்படை பின்வருமாறு அமையும்

அ) தேசிய பொலிஸ்படை

ஆ) மாகாண பொலிஸ் படை

தேசிய பொலிஸ்படை நாட்டின் இனவிகிதாசார அடிப்படையில் அமையும். மாகாணப் பொலிஸ்படை மாகாண இன விகிதாசார அடிப்படையில் அமையும். (4ஆம் பக்கம் பார்க்க)

> "எமது போராட்டபாதை அமைதி தழுவியதாகவோ அல்லது இரத்தம் தோய்ந்ததாகவோ அமைய வேண்டுமென தீர்மானிக்க வேண்டியவர்கள் இங்குள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களே"
>
> — திலீபன்
>
> தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## பேச்சுவார்த்தை நடத்த புலிகளுக்கு இறுதி அழைப்பு

### - தொண்டமான்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு செல்ல தாம் இறுதி அழைப்பு விடுத்திருப்பதாக உல்லாச பயணிகள் கிராமிய கைத்தொழில் அமைச்சர் தொண்டமான் கூறியதாக சண்டே டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

இதுபற்றி அப்பத்திரிகை மேலும் தெரிவிப்பதாவது,

தொண்டமான் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும், இந்த பேச்சுவார்த்தைக்கான அழைப்பு அரசிடம் இருந்து விடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டதாக கூறப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு வருகிறார்களா என்பதை அதன் தலைவர் பிரபாகரன் இன்னும் ஒரு வாரத்திற்குள் தெரிவிக்க வேண்டும் என்றும் இதற்காக ஆயுதங்களை களைய தாம் நிபந்தனை விதிக்கவில்லை என்று கூறியதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

---

மூலமாக்கப்பட்டுள்ளது. ... மணியளவில் நடைபெற்றுள் ... நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

## குற்றப் பிரேரணை இருக்கும் போதே பாராளுமன்றத்தை கலைக்கலாம்

(கொழும்பு)

அரசியல் குற்றப் பிரேரணை இருக்கும்போதே பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும் என முன்னணி யாப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் அரசியல் யாப்பின் பிரகாரம் செயலாற்று அதிகாரம் கொண்டவர் ஜனாதிபதியே அதி உயர் அதிகாரம் கொண்டவர் என்றும், ஸ்திரப்படுத்தபட்ட நிதியில் இருந்து அரசாங்கத் திணைக்களங்களுக்கு தேவையான நிதியை ஆறுமாத காலத்திற்கு பெற்றுக் கொடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதால் பாராளுமன்றம் இல்லாமலேயே ஜனாதிபதியால் செயற்பட முடியும் என்றும் அந்த நிபுணர்கள் தெரிவித்திருப்பதாக தெரிகிறது.

## வீரவணக்கம்

### சஞ்சுதா, லெப். விக்ரம், மனோஜ்

(யாழ்ப்பாணம்)


மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதலில்

★ சஞ்சுதா (இராமையா சிவனேஸ்வரி மாந்தோட்டம் வவுனியா) என்பவரும், நேற்றைய தினம் ஏற்பட்ட மோதலில்

★ லெப். விக்ரம் (செல்லத்துரை உதயகுமார் மிருசுவில்)

★ மனோஜ் (கண்டுமணி 4ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேர்ணல் ஜஸ்ரின் வீரமரணம்



(நமது நிருபர்)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவின் மூன்றாவது பொறுப்பாளர் லெப். கேணல் ஜஸ்ரின் (பொன்னுச்சாமி பாஸ்கரன், தையிட்டி காங்கேசன் துறை) மணலாற்றில் வீரமரணமடைந்தார். 1962 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதி பிறந்த லெப். கேணல்ஜஸ்டின் மணலாறில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமணமடைந்தார்.

## ஜனாதிபதி பதவியை உடனடியாக பிரேமதாசா இராஜினமா செய்யவும்

### - லலித்

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா உடனடியாக தனது பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட அதிருப்தியாளர்கள் கோரியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு சிறிலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசா ஆயுதம் வழங்கியுள்ளார் என்பதை அவரே ஒப்புக்கொண்டதால் இது சட்டத்துக்கு பிறம்பாக நடந்துகொண்டார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

மேலும் இந்த ஆயுதம் வழங்கிய நடவடிக்கை மூலம் பிரேமதாசா நாட்டின் பிரிவினைவாதத்துக்கு துணை போயுள்ளார் என்பதை உறுதிப்படுத்த போதுமான தொன்றாகும் என முன்னைனாள் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் (4ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை;

## புலிகள் கொன்றதாக இரு குற்றப் பத்திரிகைகள்

விடுதலைப் புலிகளேராஜீவ் காந்தியை கொலைசெய்தனர் என்று குற்றம் சாட்டும் இரண்டு குற்ற பத்திரிகையை தாம் நீதிமன்றத்தில் பதிவு செய்ய இருப்பதாக இப் படுகொலை குறித்து விசாரணை நடத்திவரும் குற்றப் புலனாய்வுக் குழு அறிவித்துள்ளது

இதற்காக தாம்போதுமான தடயங்களை சேகரித்துள்ளதாகவும் புலிகள் இந்த கொலையை நடத்தினர் என்று கூறுவதற்கு இவை போதுமான ஆதாரங்கள் என்றும் அக்குழு கூறிஉள்ளது நீதிமன்றத்தில் முறைப்படி குற்றப் பத்திரிகை தாக்கல் (4ஆம் பக்கம் பார்க்க)

## பெரும்பான்மை இழந்தால் சிறிமாவிடம் பிரதமர் பதவி

### -பிரேமதாசா

(புதுடில்லி)

ஐக்கிய தேசிய கட்சி தனது பெரும்பான்மை வலுவை இழந்தால் சிறிலங்காவின் பிரதம மந்திரி பதவியை எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு வழங்கப் போவதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

இந்த முடிவை பிரேமதாசா ஐக்கிய தேசியக் கட்சியின்கூட்டத்தில் கூறியுள்ளார்.

இந்த அறிவிப்பு தனக்கெதிராக கிளர்ந்துள்ள எதிரணியினரை பிளந்து அவர்களை நிறுத்துவதற்கான ஒரு தந்திரம் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## அமெரிக்கா நடத்தையில் கொயிலர் அதிருப்தி

(ஜெனிவா)

அமெரிக்காவின் ஆதரவுடனான மேற்கு ஆசியாவின் சமாதான மாநாட்டில் ஐ. நா. விற்கு பார்வையாளர் அந்தஸ்து மட்டுமே வழங்கப்பட்டுள்ளது போதுமானது மட்டுமல்ல நியாயமற்றதும் ஆகும் என்று ஐ. நா. செயலாளர் பெரஸ் டீகொயிலர் குறைகூறியுள்ளார். ஐ. நாவின் மண்டபமொன்றில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில் ஐ. நா. தீர்மானப்படியே இஸ்ரேல் உருவாக்கப்பட்டதை சுட்டிக்காட்டியதுடன் ஐ நாவின் தீர்மானங்களுக்கு உட்பட்டே மேற்காசியாவின் பாலஸ்தீனியர் பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதனிடையே இஸ்ரேலிலுள்ள பாலஸ்தீனியப் பிரதிநிதிகளுடன் எதிர்பாராதவிதமாகப் பேச்சுகள் நடத்திய அமெரிக்க வெளியுறவு செயலர் ஜேம்ஸ்பேக்கர் திட்டவட்டமான முடிவுகள் எதுவுமின்றியே வாஷிங்டன் திரும்பியுள்ளார்.

## குரோசியா நகரங்கள் மீது கடற்படை பீரங்கித் தாக்கு

(பிராக்)

யூகோஸ்லேவியாவில் அந்த நாட்டு கடற்படைக் கப்பல்கள் அந்நாட்டில் உள்ள ஒரு மாநிலமான குரோசியாவின் கடற்கரை ஓர நகரங்கள் மீது அகோர பீரங்கித் தாக்குதலை நடாத்தி வருகின்றன.

சிபினிட் ஸிவெனிக் ஆகிய இரண்டு கடற்கரை ஓர நகரங்களும் கடுமையான பீரங்கித் தாக்குதலுக்கும் விமானக் குண்டு வீச்சுக்கும் உள்ளாகி வருகின்றன. கப்பல்கள் இரண்டு பல மணி நேரமாக தொடர்ச்சியாகத் தாக்கின. அத்துடன் இந்த சண்டை தொடர்ந்து பல்வேறு இடங்களுக்கும் பரவிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை, யூகோசிலேவியாவில் மீண்டும் அமைதியை நிலைநாட்ட இந்தபிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்தாலோசிக்க ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையின் தலைவருக்கு அதிகாரம் வழங்கி விட்டது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமேந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கள் கிழமை காலை ஒன்பது மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் கூட்டுத்தாபனம் தொடர்பான பல்வேறு விடயங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளதால் அனைத்து ஊழியர்களையும் தவறாது சமுகம் அளிக்கும்படி நிர்வாக முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## புலனாய்வு சான்றிதழ் தேவையில்லை

(கொழும்பு)

முப்படைகள் கிராமசேவையாளர் பொலிஸ்திணைக்களம் ஆகியவற்றிலுள்ள நியமனங்கள் தவிர்ந்த ஏனைய அரச நியமனங்களுக்கு தேசிய புலனாய்வு திணைக்களத்தின் தெளிவாக்கல் சான்றிதழ் தேவையில்லை என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### வேப்பம், இலுப்பம் விதைகள்

மில்க்வைற் நிறுவனம்பாரம்பரிய மரங்களின் பயனை உணர்த்தும் வகையில் எண்ணெய் வித்துக்களான வேப்பம் / இலுப்பம் விதைகளை கிலோ ரூபா 5/- வீதம் வாங்குகிறது. பாடசாலைகள், சங்கங்கள், சபைகள் மற்றும் தனியாரும் இவற்றைச் சேகரித்துக் கொடுத்து தங்கள் நிதி வளத்தையும் பெருக்கலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். (B-3150)

## இரண்டு இலங்கையர் கைது

(கொழும்பு)

தமிழ்நாடு அரசு அறிவித்தபடி தமது பெயர்களைப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்ளாமலும், கடவுச் சீட்டுக்கள் இல்லாமலும் இருந்த இரண்டு இலங்கை வாலிபர்களை மதுரையில் பொலிசார் கைது செய்துள்ளனர்.

தமிழகத்திலிருந்து அத்தியாவசியப் பொருட்களை இலங்கைக்குத் தாம் கடத்துச் செல்வதாக விசாரணையின் போது அவர்கள் தெரிவித்தனர்.

மற்றொரு இலங்கையர் போலிக் கடவுச்சீட்டுடனும், அமெரிக்க டாலர்களுடனும் மதுரையில் கைது செய்து பொலிசார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். அவரைப் பதினைந்து நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

| தாய் மடியில் | | தமிழ் மண்ணுள் |
|---|---|---|
| 16 | | 23 |
| — | | — |
| 02 | | 09 |
| — | | — |
| 1955 | | 1987 |



### சவிரிப்பிள்ளை சுளியாம்பிள்ளை யோகரெட்ணம்

நண்பா! யோகன்
தன் மானத் தமிழனாய்ப் பிறந்து
எல்லோர்க்கும் இனியனாய் வாழ்ந்து
வாடா மலராய்
எம் கழக வாயிலை அலங்கரித்தாய்
புரட்சிப் புயலென அன்று நடந்த
எழுச்சி ஊர்வலத்தில் பங்கேற்றாய்
அங்கே! ... அங்கே ... ... ...
தர்மம் தோற்று விட்டது
ஆம் நாம் யோகனை இழந்து விட்டோம் !!!
ஊராரின் கண்ணீரில் - நீ
பவனி வந்த அந்நாளை எண்ணி
நாம் கண்ணீரில் மௌனமாகினோம் !

(B/3161) - நண்பர்கள்!

---

## 4ஆம் ஆண்டு நினைவு



### மேஜர் அப்துல்லா
(கணபதிப்பிள்ளை நகுலகுமார்)

| பிறப்பு | திதி: | இறப்பு |
|---|---|---|
| 20 07-1963 | 23-9-1991 | 05 10-1987 |

நீறு பூத்த நெருப்பாயின்று
நெஞ்சில் நிலைத்த கடற்புலி அப்துல்
பேறு பெற்ற தலைமைக் காப்பில்
பெற்ற நல்ல பைந்தமிழ் வீரன்
கொள்கையில் குன்றமானாய்
கொடும்பகை வென்று சென்றாய்
சாவகச்சேரி மண்ணின்
சாதனை பெற்ற வேங்கை.

கச்சாய் வீதி, சாவகச்சேரி. - குடும்பத்தினர்

(B/1493)

---

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
### பண்டத்தரிப்பு கோட்டம்
### தியாகி திலீபனின் 4 ஆவது ஆண்டு
### நினைவு நாள் விழா

இடம்: பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
காலம்: (23 09 91) இன்று
நேரம்: பி.ப. 3 00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

நினைவுரை: விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்
கவியரங்கு: ஜெயசிலன் குழு
இசையரங்கு: பார்வதி சிவபாதம்
வில்லிசை: ஒன்றிய மாணவர்கள்
நாடக அரங்கு: 'தியாகத்தில் வளரும் தாயகம்'
'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்'
'பார்த்திபன் கனவு பலித்தது'


அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (B -3166)

---

## நினைவு கூருகின்றோம்...

1991 - 09 - 23

### றொயிஸ்



1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பு ஆரையம்பதியில் சிறிலங்கா இரகசியப் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட
பாண்டியன் (முத்தன் நல்லதம்பி - தாழங்குடா)
1986ஆம் ஆண்டு கும்புறுபிட்டியில் சிறிலங்காப் படையினரின்

---

## இதோ! அறிமுகப்படுத்துகின்றோம்

## தொழில்நுட்பக் கல்லூரியில் அனுமதி

(கொழும்பு)

தொழில் நுட்பக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்

அங்கே! ... அங்கே ... ... ...
தர்மம் தோற்று விட்டது
ஆம் நாம் யோகனை இழந்து விட்டோம் !!!
ஊராரின் கண்ணீரில் - நீ
பவனி வந்த அந்நாளை எண்ணி
நாம் கண்ணீரில் மௌனமாகினோம் !

(B/3161) - நண்பர்கள்!

நீறு பூத்த நெருப்பாயின்று
நெஞ்சில் நிலைத்த கடற்புலி அப்துல்
பேறு பெற்ற தலைமைக் காப்பில்
பெற்ற நல்ல பைந்தமிழ் வீரன்
கொள்கையில் குன்றமானாய்
கொடும்பகை வென்று சென்றாய்
சாவகச்சேரி மண்ணின்
சாதனை பெற்ற வேங்கை.

கச்சாய் வீதி, சாவகச்சேரி. - குடும்பத்தினர்

(B/1493)

# இதோ!

# அறிமுகப்படுத்துகின்றோம்

**விரைவில் இந்த இடத்தில்**
**ஓர் உள்ளூர் உற்பத்தி**
**நீங்களே! மூக்கின்மேல்**
**விரலை வைப்பீர்கள்!!**

தயாரிப்பு:
யாழ். மாநகர தெங்கு பனம்பொருள்
உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச்சங்கம்

(R-1766) விளம்பர வடிவமைப்பு: செலிந் ஜோ. ஈகட்டன்

## பட்டப்படிப்புகள் கல்லூரி
## புதிய மாணவர்களை அனுமதித்தல் 91/92

யாழ். / பேராதனைப் பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப்பட்டப்
பாடநெறிகளுக்கான விரிவுரைகள் யாவும்
28. 09. 1991 இல் ஆரம்பமாகவுள்ளன.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்களும்,
பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் பின்வரும் பயிற்சி நெறிக்கு
விண்ணப்பிக்கலாம்.

★ கலைமுதற் தேர்வு G. A. Q.
★ விஞ்ஞான முதற்தேர்வு G. S. Q,
★ வர்த்தக முதற்தேர்வு First in Commerce.

பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரைகளுக்கு
வழமையான விரிவுரையாளர்களும்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரைகளுக்கு
ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்களும்
விரிவுரைகளை வழங்குவார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
விரிவுரைகள்
பின்வரும் முகவரியிலும் நடைபெறும்.
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பேராதனைப் பல்கலைக்கழக
விரிவுரைகள்
பின்வரும் முகவரியிலும் நடைபெறும்.
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/48, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்,

(B-3164)

## தொழில்நுட்பக் கல்லூரியில் அனுமதி

(கொழும்பு)

தொழில் நுட்பக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தேசிய தொழில் நுட்பவியல் பிரிவில் சேரவிரும்பும் மாணவர்கள் பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை அடுத்த மாதம் பதினைந்தாம் திகதிக்கு முன்பாக தொழில் நுட்பக் கல்லூரி அதிபர்களிடம் ஒப்படைக்கவேண்டுமெனத் தெரிகிறது. இது பற்றிய மேலதிக விபரங்கள் இம்மாதம் பதின்மூன்றாம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## சண்டிஹோம விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான மகா சண்டிஹோம விழா எதிர்வரும் 30-ஆம் திகதி திங்கட் கிழமை முதல் 2 ஆம் திகதி புதன் கிழமை வரை மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

மேற்படி தெய்வீகவேள்வியில் அடியார்கள் அனைவரையும் கலந்து அம்பிகையை வழிபட்டேத்தியும் அருட்பேறடையும் வண்ணமும் ஆலய தர்மகர்த்தா கேட்டுக் கொள்கின்றார்.

## திருட்டைத் தடுக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச்சங்கக் கிளைகளில் உலர் உணவு மற்றும் பால்மா திருட்டு சமீபகாலங்களில் அதிகரித்து உள்ளதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரவு நேரங்களில் நடக்கும் திருட்டுக்களைத் தடுக்கும் வகையில்யாழ் பல. நோக்குக் கூட்டுறவுச் சங்க 45 கிளைகளுக்கும் இரவு நேரங்களுக்கான காவலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கிளைக்குழுக்களின் சிபார்சின் அடிப்படையில் நியமிக்கப் பட்டுள்ளனர்.

1991 - 09 - 23

## றொயிஸ்



1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பு ஆரையம்பதியில் சிறிலங்கா
இரகசியப் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட
**பாண்டியன்** (முத்தன் நல்லதம்பி - தாழங்குடா)
1986ஆம் ஆண்டு கும்புறுபிட்டியில் சிறிலங்காப் படையினரின்
எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய
**ஐயா**
1987ஆம் ஆண்டு உண்ணாவிரதமிருந்த திலீபனின் ஐந்து அம்சக்கோரிக்கைகளை
வலியுறுத்தி மன்னார் எழுத்தூரிலிருந்த இந்தியப்படை முகாமுக்கு மகஜர்
கொடுக்கச் சென்ற சமயம் இந்தியப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம்
செய்ததில் உயிரிழந்த எமது ஆதரவாளர்
**யோகன்** (சவிரிப்பிள்ளை சுளியாம்பிள்ளை யோகரட்ணம்)
1988ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
**றொயிஸ்** (குசராசா சரவணபவான் - வவுனியா)
1989ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
**ரஞ்சன்** (க. சத்தியசீலன் - வாழைச்சேனை.)
தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்டு முண்டங்களாக மீட்கப்பட்ட
எமது ஆதரவாளர்களான வேலணையைச் சேர்ந்த
**இந்திரநாதன்**
யாழ் இராசேந்திரா வீதியைச் சேர்ந்த
**நாகநாதன் பாலேந்திரா**
இயக்கச்சியைச் சேர்ந்த
**தர்மகுலேந்திரன்**
1990ஆம் ஆண்டு மியாங்குளத்தில் சிறிலங்காப்படையினரின் சுற்றி
வளைப்பின் போது வீரமரணமெய்திய
**சோழன்** (ஐயங்கேணி, ஏறாவூர்)
தமிழீழ கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடனான
மோதலின் போது வீரமரணமடைந்த
**லெப்.கேணல் சந்திரன்** (இராமலிங்கம் முத்துலிங்கம் - 4ஆம் வாய்க்கால், கிளிநொச்சி)
**மேஜர் யப்பான் / வின்சன்** (நவரத்தினம் வசந்தன் - நறுவிலடி, வல்வெட்டித்துறை)
**மேஜர் அரவிந்தன், கப்டன் நிவாஸ், நுட்வின், நரேன், ரமணீதரன், அலிஸ், சைமன், கோமேஸ்**
எமது ஆதரவாளர்களான படகோட்டிகள்
**லிங்கம்** (வல்வெட்டித்துறை)
**பொன்ராசா,** ஆதரவாளர் **செல்வராசா**

திருக்கோவில் சிறிலங்காப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த
போது சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

**ஆகியோரை இந்நாளில் நினைவு**
**கூருகின்றோம்.**

மேஜர் ஜப்பானின் பெயர் நேற்றைய நினைவு கூருகின்றோம் பகுதியில்
தவறுதலாக இடம் பெற்றுவிட்டது.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3159)

**சிந்தனைக்கு**

உன் சொல்லுக்கு ஒப்பச் செயலையும்,
செயலுக்கு ஒப்பச் சொல்லையும்
இணங்கச் செய்.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2830 நிர்வாகபீடம் 580
உ. பி. ஜ. கண் 03

# மரநடுகையும் காட்டுத்தீயும்

செப்டெம்பர் மாதம் 17ஆம்திகதி சிறிலங்காவில் மரம் நடுகை தினமாகும். அதைத் தொடர்ந்து ஒரு வாரம் மர நடுகை வாரமாக மத்திய சுற்றாடல் துறை அதிகார சபை அனுஷ்டித்து வருகின்றது. கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் மர நடுகை வாரத்தை முன்னிட்டு சிறிலங்கா ஜனாதிபதியும் அவரது சகாக்களும், இராணுவ, பொலிஸ் உத்தியோகத்தர்களும் மரக்கன்றுகளை நட்டு அதற்கு நீரும் ஊற்றினர்.

தென்னிலங்கையில் இடம்பெற்று வரும் இந்த அரசியல் நெருக்கடியின் மத்தியிலும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும் சிறிலங்கா அதிகாரிகளும் சுற்றாடல் பாதுகாப்பிற்காகவும், காலநிலை மாறுபாட்டைத் தவிர்ப்பதற்கும் அதன் மூலம் மனித இனத்தையும், அதன் நடவடிக்கைகளையும், பாதுகாப்பதற்கும் தீவிர அக்கறை காட்டி வருவதாகக் கூறுகின்றனர். பெரும் பிரசாரத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். அரச கட்டுப்பாட்டிலுள்ள தொலைக்காட்சியிலும் வானொலியிலும் அதற்கு வழங்கப்படும் முக்கியத்துவமும் மிகப் பெரிது.

அதேவேளை காட்டு வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. பொதுவாக ஒரு நாட்டில் குறைந்தது 30 சதவீதமாவது காட்டு வளமாக இருக்கவேண்டும் என்பது கணிப்பீடாகும். இதன் மூலமே இயற்கைச் சமநிலையைக் குறைந்தளவேனும் பேணமுடியும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றார்கள்.

ஆனால், இதனைப்பற்றி பிரசாரம் செய்யும் அரசியல் வாதிகளின் நடவடிக்கைகள் அவற்றிற்கு முற்றிலும் எதிர் மாறானதாகவே உள்ளன. சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நான்காவது வாரமாகத் தொடர்ச்சியாக வீசி வரும் நேபாம் குண்டுகளால் மணலாறு - முல்லைத்தீவு காடுகளே தீப்பற்றி எரிந்த வண்ணமுள்ளன. இக்காடுகள் சுவாலைவிட்டு எரியும் வெளிச்சம் பல மைல்களுக்கு அப்பால் தெரிகின்றது. காடுகள் மட்டும் எரியவில்லை பயிர்களும், மனித உடல்களும் சேர்ந்து தீப்பற்றி எரிகின்றன. காட்டு விலங்குகள் கொல்லப்படுகின்றன. பெருமளவு மிருகங்கள் காட்டை விட்டு வெளியேறி கிராமங்களுக்குள் புகுந்துள்ளன. மக்கள் சூழவுள்ள கிராமங்களை விட்டே வெளியேறி விட்டனர்.

மணலாறு - முல்லைத்தீவுக் காட்டுப்பகுதியில் குண்டு வீச்சினால் மட்டும் சிறிலங்கா ஆயுதப்படையினர் காடுகளை அழிக்கவில்லை. பெரும் மரங்களை வெட்டி வீழ்த்தி வருவதுடன் பாரிய இயந்திரங்களைக் கொண்டு அவற்றை அழித்தும் வருகின்றனர். இந்நிலையிலேயே மரம் நடுகையைப் பற்றியும், சூழல் பாதுகாப்பு பற்றியும்

# குர்திஷ் மக்களுக்கு ஒரு தனிநாடு

மேற்கு ஆசியாவில் எந்த ஒரு மாநாட்டிலோ அல்லது வேறு நிகழ்ச்சியிலோ குர்திஷ் இனத்தைச்சேர்ந்த பத்திரிகாசிரியர் ஒருவரையேனும் சந்திப்போம். அவர்கள் இயற்கையையும், மலைகளையும்தவிர வேறு எந்தஒரு நண்பர்களும் இல்லையென்று தான் சொல்லுவார்கள்.

உலகத்திலே கூடுதலாக வாக்குறுதி அளிக்கப்பட்டவர்களுக்கு கூடுதலாக பயன்படுத்தப்பட்டவர்களும் கூடுதலாக மறுக்கப்பட்டவர்களும் இவர்கள்தான். பெரிய அளவில் இவர்கள் கொல்லப்பட்டார்கள் இதற்கு இரண்டாம் உலகப் போரில் கொல்லப்பட்ட யூதர்கள் விலக்காக இருக்கலாம். இப்பொழுது நடப்பது போல் சில வருடங்களுக்கொருமுறை குர்திஷ் மக்கள் உலக கவனத்தை ஈர்க்கிறார்கள். ஆனால் அவர்களுடைய அபிலாசைகள் இரக்கமில்லாத முறையில் நசுக்கப்பட்டு விட்டன. இப்படியான செய்கைகள் எரியும் நெருப்பில் எண்ணை ஊற்றுவது போலானதாகும். சதாம் ஹுசைனின் குண்டுகளோ நச்சுவாயுக்களோ, குர்திஷ் மக்களின் எழுச்சியை தடைசெய்ய முடியவில்லை.

ஈராக், சிரியா, ஈரான், துருக்கி நாடுகளின் மலைத்தொடர்புகள் சந்திக்கும் எல்லைகளைக் கொண்ட பகுதிகளில் 2½ கோடி மக்கள் வாழ்கிறார்கள் சோவியத் கௌகஸ் பகுதிகளில் சிதறலாக வாழுகின்றனர். (மேற்கூறிய நாடுகள் குர்திஷ் மக்களின் உரிமைகளை கொடுக்க ஒப்புக்கொள்ளாமலும், உள் நாட்டில் இவர்கள் வேறு இனத்தவர்களென்று காட்டாமலும், அவர்களுடையதொகையைக் குறைத்தும் காட்டுவதால், இவர்களைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு லண்டனில் உள்ள சிறுபான்மையினரின் உரிமைக் குழுத்தான் (MRG) சரியான தகவல்களைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது.) இவர்கள் இடம் பெயரும் மக்களாக இருப்பதால் இவர்களுக்கென்று தனி எல்லையை நிர்ணயிப்பது சுலபமல்ல. இவர்களில் அனேகமானோர்சன்னி முஸ்லிம்களாய் இருந்தாலும், அவர்களின் மொழி துருக்கியிலும் பார்க்க பேர்ஷியன் மொழியைப் போல கிட்டத்தட்ட ஒத்திருப்பதோடு, அராப் மொழியோடு தொடர்பே இல்லாததாகக் காணப்படுகிறது.

## குர்திஷ் மக்களின் சனச் செறிவு

சனச் செறிவு பரவலைப் பார்க்கும் பொழுது கூடிய குர்திஷ் மக்கள் (1 1கோடி) துருக்கியில் வாழுகின்றனர். ஈரான் நாடுகளுடனும், தங்களுக்குள்ளேயும் சண்டையிட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இவர்களுக்குள்ளே 20 பிரிவுகளாக பிரிந்து இருக்கிறார்கள். இவர்களில் தங்களை பெஸ்மார்கஸ் (இறப்புக்கு முன் நடப்பவர்கள்) என அழைக்கின்றார்கள். இவர்கள் தொகை 26,000 ல் இருந்து 35,000 வரை இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஈராக்கை பலவீனப் படுத்துவதால் அவர்கள் தங்கள் சுயாட்சி உரிமை அல்லது சுதந்திரத்தைப் பெறுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் திரும்பவும் குர்திஷ் மக்கள் ஈராக்கை வீழ்ச்சியடையச் செய்ய இதற்கு முன் நடந்ததைப்போல் பயன்படுத்தப்படுகிறார்களே ஒழிய இவர்களுக்குக் கிடைக்கப்போவது ஒன்றுமேயில்லை.

ஈரான், ஈராக் குர்திஷ் மக்களை அடக்கி ஆண்டதைவிட, உலகத்திலே துருக்கி அரசு சிறுபான்மையினரை நசுக்கி ஆட்சி புரிவதைப் போல வேறு எந்த ஒரு நாடும் செய்யவில்லை குர்திஷ் மக்களை தங்களுடைய நாட்டு மக்களோடுசேர்ந்துவிடுவதாக அங்காரா (துருக்கி) கூறுகிறது ஆனால் துருக்கியின் யாப்புப்படி குர்திஷ் மக்களின் மொழி தடைசெய்யப்பட்டதோடு அவர்களுடைய இலக்கியமும் மறைக்கப்பட்டுள்ளது. ஏன், குர்திஷ் என்ற வார்த்தையே பேசக்கூடாது. தென் ஆபிரிக்காவில் கறுப்பர்களை நடத்துவதிலும் பார்க்க துருக்கியில் குர்திஷ் மக்களை நடத்துவது மிகவும் கொடுமைவாய்ந்தது என்று மனித உரிமைக்குழுக்கள் கூறுகிறார்கள்.

## மொழிபற்றிய சட்டதிருத்தம்

துருக்கி ஜனாதிபதி ரேகட் ஒசல் குர்திஷ் மக்களின் நலன்களைப் பற்றி அண்மையில்தான் கவனமெடுக்கத் தொடங்கிவிட்டார். சதாம் ஹுசைனை ஆட்சியிலிருந்து விழ்த்துவதற்கு குர்திஷ் மக்கள் முக்கிய பங்கு எடுப்பார்களென்று நினைத்துக்கொண்டு அவர்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுப்பவர் போல் இனம் காட்டத் தொடங்கினார் ஜனவரியில் அவர் குர்திஷ் மக்களின் மொழியைப் பற்றி அரசாங்கத்தில் சட்டத்திருத்தம் ஒன்று கொண்டு வந்தார் அதன்படி அவர்களின் மொழி பதிவு நாடாவில்மட்டுந்தான் பாவிக்கலாம். புத்தகம் பத்திரிகையில் பாவிக்க முடியாது. அவ்வொப்பந்தத்தை ரத்துச் செய்து விட்டது.

யுத்தத்திற்குப் பின்புஇருந்த எல்லைப்புறங்களை பாதுகாக்கவும், எல்லாப்பிரதேசங்களையும் சேர்த்து ஒரு நாடாக வைத்திருப்பதற்காகவும், குர்திஷ்தான் மாகாணத்திலை இருக்கும் கேர்குக் எண்ணை வயல்களை விட்டுக்கொடுக்க விரும்பாமல் இருந்ததனாலும் குர்திஷ் மக்களுக்கு மேலதிக சுயாட்சி கொடுக்கப் பட்டுள்ளதாக ஈராக் பல முறை கூறினாலும், உண்மையில் ஒன்றுமேனும் கொடுக்கவில்லை. குர்திஷ்தான் மாகாணத்திலுள்ள கேர்குக் எண்ணை நகரத்திலிருந்து தினமும் 8 லட்சம் பீப்பாய் எண்ணை எடுக்கப்பட்டு, துருக்கி வழியாக குழாய்கள் மூலம்வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது அப்படிப்பட்ட வருமானத்தை எந்த நாடுகளும் கைவிட விரும்பாது


ஈராக்கிலுள்ள குர்திஷ் மக்களுக்கு சதாம் ஹுசைன் மட்டும் எதிர்த்து நிற்கவில்லை. ஓட்டமன் காலத்திற்கு முன்பு நடந்த போராட்டங்களை சுருக்கமாக குறிப்பிடுவது மிகவும் பயன்தரும்

பாலஸ்தீனியர்களை போல குர்திஷ் மக்களுக்கு படிப்பறிவோ, அல்லது அரசியல் தொடர்போ இருக்கவில்லை. 1918 இல் ஓட்டோமன் சாம்ராஜ்யம் கவிழ்ந்து 5 வருடத்திற்குப் பின்புதான் இவர்களுக்கு ஒரு நாடு அமைவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. துருக்கியும் நேசநாடுகளும் 1920இல் கைச்சாத்திட்ட செவ்றெஸ் (Sevres) ஒப்பந்தத்தின்படி ஓட்டோமன் சாம்ராஜ்யத்திற்குள் குர்திஷ் மக்களுக்கு தன்னாட்சி வழங்கப்பட்டது இதன்படி சுதந்திரத்திற்கு வாக்குறுதி கொடுத்ததாக சிலர் கூறுகின்றனர்.

புதிய நாடு ஈரானின் ஷா மன்னரால் தகர்த்தெறியப்பட்டது மூல்லா முஸ்தாபா பர்ஷாணி (Mulla Mustaba Barzani) வட ஈராக்கிலிருந்து ஒரு சிறிய குர்திஷ் படையுடன் ஈராணைத்தாக்கினார். ஆனால் ஈராக்கியப்படை ஆங்கிலேயரின் கைப்பொம்மையாக இருந்த ஈராக்கிய மன்னரை 1958 இல் தூக்கி எறிந்ததும் முஸ்தாபா பர்ஷாணி வட ஈராக்கிற்கு திரும்பிவிட்டார்.

1961இல் இருந்து ஈராக்கில் பல கலகங்களை நடத்திய பின் திரு பர்ஷாணி குர்திஷ் மக்களுக்குச் சில அரசியல், கலாசார சலுகைகளை பெற்றுக்கொடுத்தார். 1970 மார்ச் மாதத்தில் சதாம் ஹுசைன் ஈராக்கின் உபஜனாதிபதியாக இருந்தபொழுது, குர்திஷ் மக்கள் ஈராக்குடன் ஒரு ஒப்பந்தத்தை வற்புறுத்திச் செய்து கொண்டனர். அந்த ஒப்பந்தத்தின் படி ஈராக் குடியரசின்கீழ் குர்திஷ் மக்கள் ஒரு சுயாட்சி நடத்த ஏற்பாடாகியது. 1970 இல் இருந்து 1974 வரை சதாம் ஹுசைன் ஆட்சியிலிருந்த பொழுது, ஈராக் குர்திஷ் மக்களுக்கு ஒரு பகுதியைசுயாட்சி நடத்தவும், பாடசாலைகளில் குர்திஷ் மொழியை படிப்பிப்பதற்கும் வாய்ப்புப் பெற்றனர். இவையெல்லாம் ஷா மன்னரின் தூண்டுதலால் கிடைக்கப்பட்டவை அமெரிக்க, இஸ்ரேல் உதவியுடன் ஷா மன்னர் ஈராக்கிற்கு எதிராக பிரச்சினைகளைக் கொடுக்கும்படி கிளர்ச்சித் தலைவர் பர்ஷாணியைத் தூண்டிவிட்டார். காலப்போக்கில் குர்திஷ் மக்களுக்குப் பாதகமாக ஈராக் ஈரானுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி சாட் அல்-அராப் நீரிணையைஷாவிற்குக் கொடுத்து. அதற்குப் பதிலாக ஷா மன்னர் குர்திஷ் மக்களுக்கு எந்த ஒரு உதவியை

குர்தீஸ் இனமக்களின் குடிசனப்பரம்பல் (...)




யான 10 ஆயிரம் சதுர கி.மீ பிரதேசத்தை கைப்பற்றிக் கொண்டனர். செல்வந்தஅரேபிய நாடுகளினதும் மேற்கு நாடுகளினதும் உதவியால் ஈராக் வளர்ந்து கொண்ட இராணுவ பலத்தை இவர்கள் சரியாகக் கணிக்கவில்லை.

## குர்திஷ் மக்கள் மீது நச்சுவாயு

1988 இல் குர்திஷ் மக்கள் பாரதூரமான நடவடிக்கைகளுக்கு ஆளாக வேண்டியிருந்தது. ஈரான் எல்லையிலிருந்து 25 கி மீ தூரத்தில் ஈராக்கிற்குள் 1½ லட்சம் குர்திஷ் மக்களைக் கொண்ட கலாப்கா [Halabga] என்ற நகரத்தின் மேல், நச்சுவாயு பரப்பப்பட்டது இச்செயலை செய்வதற்கு அனுமதி கொடுத்தவர் சதாம் ஹுசைனின் மைத்துனரான. உள்நாட்டு விவகார மந்திரியாயிருந்த அலி கஸான் அல்-மயீத் ஆவர். இவர் தான் 1990 இல்குவைத் மீட்கப்பட்ட பின் அதன் ஆளுனராக நியமிக்கப்பட்டார். கலாப்காநகரின்மேல் போடப்பட்ட இரசாயனக் குண்டுகளினால் 6000 பேர் இறந்ததும் 10,000 பேர்வரை காயப்பட்டும், 55,000 பேர் வீடுகளையும் இழந்தனர் சதாம் ஹுசைன் தான் எவ்வளவோ உதவிகளைச் செய்தும்குர்திஷ் மக்கள் அதை பொருட்படுத்தாது தனக்கு எதிராக யுத்தத்தில் இறங்கியதற்காக பழிவாங்கும் நடவடிக்கையாக இதைச் செய்தார்

உலகம் வாய்ப்பேச்சோடு, மௌனமாக இருந்தது. 'எங்களுக்கு அராபிய நாடுகளில் ஒரு நண்பர்களும் இல்லை. ஈரானியர் எவ்வளவு காலத்திற்கு உதவி புரிவார்கள்? 1975 ல் அல் ஜியேர் (Algiers) ஒப்பந்தத்தின்படி ஈரான் ஷா மன்னர் ஜனாதிபதி சதாம் உசைனுக்குக்கைகொடுத்து எங்களைக் கைவிட்டுவிட்டார் என்று குர்திஷ் தலைவர் தலாபாணி கோபத்துடன்கூறினார்

இதில் குர்திஷ் மக்களின் பிழைகளும் இருக்கின்றன. மேற்கு நாடுகளும், ஈரானும், மற்றவர்களும் குர்திஷ் மக்களின் அபிலாஷைகளைத் (சுதந்திர நாடு) தீர்த்து வைப்பதற்காக ஆசைகாட்டி இவர்களை கைப்பொம்மைகளாக பாவித்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் இவர்கள் ஈராக்கின் உதவியுடன் ஈரானுக்கு எதிராக செயல்பட்டனர். இப்படி குர்திஷ் மக்களின் நிலை மாறி மாறிக் கொண்டேயிருக்கிறது.

## நேரத்திற்கேற்ற தந்திரமான செயல்

வாதிகளின் நடவடிக்கைகள் அவற்றிற்கு முற்றிலும் எதி மாறானதாகவே உள்ளன. சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நான்காவது வாரமாகத் தொடர்ச்சியாக வீசி வரும் நேபாம் குண்டுகளால் மணலாறு - முல்லைத்தீவு காடுகளே தீப்பற்றி எரிந்த வண்ணமுள்ளன. இக்காடுகள் சுவாலைவிட்டு எரியும் வெளிச்சம் பல மைல்களுக்கு அப்பால் தெரிகின்றது. காடுகள் மட்டும் எரியவில்லை பயிர்களும், மனித உடல்களும் சேர்ந்து தீப்பற்றி எரிகின்றன. காட்டு விலங்குகள் கொல்லப்படுகின்றன. பெருமளவு மிருகங்கள் காட்டை விட்டு வெளியேறி கிராமங்களுக்குள் புகுந்துள்ளன. மக்கள் சூழவுள்ள கிராமங்களை விட்டே வெளியேறி விட்டனர்.

மணலாறு - முல்லைத்தீவுக் காட்டுப்பகுதியில் குண்டு வீச்சினால் மட்டும் சிறிலங்கா ஆயுதப்படையினர் காடுகளை அழிக்கவில்லை. பெரும் மரங்களை வெட்டி வீழ்த்தி வருவதுடன் பாரிய இயந்திரங்களைக் கொண்டு அவற்றை அழித்தும் வருகின்றனர். இந்நிலையிலேயே மரம் நடுகையைப் பற்றியும், சூழல் பாதுகாப்பு பற்றியும் ஒரு புறத்தில் தீவிர போதனை நடைபெறுகின்றது.

இவ்வருடத்தின் ஆரம்பத்தில் நிகழ்ந்த வளைகுடாப் போரின் போது ஈராக்கின் நடவடிக்கையினால் வளைகுடாவின் சூழல் மாசு அடைந்ததாக பெரும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. குவைத்தில் எரிந்து கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான எண்ணெய்க் கிணறுகளில் இருந்து வெளியேறும் புகையும், அமிலங்களும் வளிமண்டலத்தை மாசுபடுத்துவதாகவும், வளைகுடாவில் சிந்தப்பட்ட பல ஆயிரம் தொன் எண்ணெயினால் குடாக்கடல் மாசுபடுத்தப்பட்டதாகவும், உயிரினங்கள் அழிந்ததாகவும் பெரும் கூக்குரலும் எழுப்பப்பட்டது.

ஆனால், அமெரிக்காவும், அதன் கூட்டாளிகளும் ஈராக் மீதும், குவைத் மீதும் வீசிய பல ஆயிரக் கணக்கான தொன் வெடிப் பொருள்களினால் ஏற்பட்ட சூழல் பாதிப்புக்களையோ அன்றி, சேதங்களைப் பற்றியோ எவரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அமெரிக்காவின் குண்டு வீச்சுக்கு உள்ளான பிரதான ஈராக்கிய நகர்களான பஸ்ராவிலும், பாக்தாதிலும் வெடிப்பொருள்களினால் ஏற்பட்ட வெப்பமும், மணமும் மனித சுவாசத்தியத்திறகோ அன்றி உயிர் வாழ்க்கைக்கோ ஏற்படுத்திய அவலத்தை எவரும் குறிப்பிடவில்லை. இதனால் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் இறந்ததும், தற்பொழுது இறந்துவருவதும் எவருக்கும் தெரியவில்லை.

இதை ஒத்த நிலையே இன்று இலங்கையில் தமிழர் பிரதேசங்களில் நிகழ்கின்றது. ஒரு புறம் சூழல் பாதுகாப்பு, மரநடுகை, பராமரிப்பு பற்றிப் பேசுபவர்கள் மறுபுறம் அவற்றை அழிப்பதில் தீவிர கவனம் செலுத்துகின்றார்கள். சட்ட விரோதமாக காட்டுமரங்கள் வெட்டப்படுவது சூழலுக்குப் பெரும் தீங்கெனக் கூறுகின்றவர்கள் காட்டுத் தீ மூலம் பல சதுர மைல் பரப்புள்ள மரங்கள் அழியக் காரணமாகின்றார்கள்.

தமிழ் மக்களின் உயிரையோ உடைமைகளையோ ஒரு பொருட்டாகக் கொள்ளாதவர்களிடம் தமிழ் மக்களின் வளங்களையும். இயற்கைச் சூழலையும் பாதுகாப்பார்கள் என நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? ஆனால், இவர்கள் தென்னிலங்கையில் கூட வனப்பாதுகாப்பிலோ இயற்கைச் சூழலிலோ காட்டும் அக்கறையும் போலியானது. அவர்கள் எதிர்காலத்தில் தமது பெயர் நிலைக்க பொது இடத்தில் ஒரு மரம் வளர்வதையே விரும்புகின்றனர்.

இருப்பதால் இவர்களுக்கென்று தனி எல்லையை நிர்ணயிப்பது சுலபமல்ல. இவர்களில் அனேகமானோர் சன்னி முஸ்லிம்களாய் இருந்தாலும், அவர்களின் மொழி துருக்கியிலும் பார்க்க பேர்ஷியன் மொழியைப் போல கிட்டத்தட்ட ஒத்திருப்பதோடு, அராப் மொழியோடு தொடர்பே இல்லாததாகக் காணப்படுகிறது.

## குர்திஷ் மக்களின் சனச் செறிவு

சனச் செறிவு பரவலைப் பார்க்கும் பொழுது கூடிய குர்திஷ் மக்கள் (1 1கோடி) துருக்கியில் வாழுகின்றனர். ஏனையவர்கள் பின்வரும் இடங்களில் வாழுகின்றனர். ஈரான் 60 லட்சம், ஈராக் 35 லட்சம், சிரியா துருக்கிக்கும் ஈரானுக்கும் அண்மையில் உள்ள சோவியத் யூனியனிலும் சிறு தொகையினர் காணப்படுகின்றனர். இது தவிர மேற்கு ஜேர்மனியில் உள்ள 15 லட்சம் துருக்கியருள் 4 லட்சம் குர்திஷ் மக்கள் வேலை செய்கின்றனர். நெதர்லாந்தில் 40 ஆயிரம் குர்திஷ் மக்கள் இருக்கிறார்கள். குர்திஷ் மக்களுக்கு ஒரே மொழியும், மரபுமுறைப் பழக்க வழக்கங்கள் இருந்தும் தங்களுக்கென்று கூற ஒரு சொந்த நாடுமில்லை, தன்னாட்சி உரிமையுமில்லை.

## ஒட்டோமன் வீழ்ச்சிக்குப் பின்


ஒட்டோமன் சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்த பின் குர்திஷ் மக்களுக்கு ஐரோப்பிய நாடுகள் அவர்களின் சமூக உரிமைகளை மறுத்ததுதான் இவர்களுக்குச் செய்த பெரும் துரோகமாகும். எட்டு வருட ஈராக் - ஈரான் யுத்தத்தின் பின், ஈராக் குர்திஷ் மக்கள் குடியிருந்த பகுதிகளை அழித்தும், வட எல்லைப்புறமாகவுள்ள இடங்களை எரித்தும். 5 லட்சம் மக்களைஉள் பகுதிக்குள் நகர்த்தியும் எல்லைப் பகுதியில் 30 கி.மீ அகலமும் 1600 கி.மீ] நீளம் பாதுகாப்பு வலையம் அமைத்தது. இரண்டு எல்லை நகரங்களான ஹாக்கோவும் ஹனாஜின்னும தவிர முழுபபாதுகாப்பு வலையத்திலும் மக்கள் வாழ்க்கை நடத்த முடியாதபடி செய்துவிட்டனர்.

தங்களுக்கென்று ஒரு நாட்டை ஆட்சிபுரிய, வட ஈராக்கில் கடைசியாக நடந்த எழுச்சி இத்தோடு முடிவடையப்போவதில்லை, அது தொடர்ந்தே நடக்கும் போராட்டமாகவே இருக்கிறது. முதலாம் உலக யுத்தத்திலிருந்து துருக்கி, ஈராக்,

நலன்களைப் பற்றி அண்மையில்தான் கவனமெடுக்கத் தொடங்கிவிட்டார். சதாம் ஹுசைனை ஆட்சியிலிருந்து வீழ்த்துவதற்கு குர்திஷ் மக்கள் முக்கிய பங்கு எடுப்பார்களென்று நினைத்துக்கொண்டு அவர்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுப்பவர் போல் இனங் காட்டத் தொடங்கினார் ஜனவரியில் அவர் குர்திஷ் மக்களின் மொழியைப் பற்றி அரசாங்கத்தில் சட்டத்திருத்தம் ஒன்று கொண்டு வந்தார் அதன்படி அவர்களின் மொழி பதிவு நாடாவில்மட்டுந்தான் பாவிக்கலாம். புத்தகம் பத்திரிகையில் பாவிக்க முடியாது. அவருடைய சட்டதிருத்தம் கூடிய எதிர்ப்பினால் தோல்வியானது. மார்ச் மாதத்தில் ஈராக் அரசாங்கம் பலவீனமடைந்ததும் ஜனாதிபதி ஓசால் வடஈராக்கில் சுதந்திர குர்திஷ்தான் நாடு உருவாவதற்கு தாங்கள் எதிர்ப்பதாகவும், ஆனால் ஜனநாயக ரீதியில் சமஷ்டி ஆட்சியின் கீழ் கூட்டு அரசாங்கம் அல்லது குடியரசாக இருப்பதற்கு பூரண ஆதரவு தருவதாகத் தெரிவித்தார். துருக்கி ஐரோப்பாவில் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இஸ்லாமிய அரசியலில் முக்கிய பங்கை வகிக்க வேண்டும் என்பதால் ஜனாதிபதி ஓசால் குர்திஷ் மக்களுக்குகூட்டாட்சி முறையை கொடுக்கத் தீர்மானித்தார் என்று துருக்கி அதிகாரிகளை சந்தித்த பின் திரு ஜலால் தலாபாணி (Puk குர்திஷ் தான் தேசாபிமான ஐக்கிய முன்னணித் தலைவர்) ஒரு முடிவுக்கு வந்தார்.

ஜனாதிபதிஓசால்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவு செய்வது கொஞ்சம் கடினம். ஒட்டோமன் சாம்ராஜ்யம் 1920இல் வீழ்ச்சியடைந்ததிலிருந்து குர்திஷ் மக்கள்சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்தார்கள். குர்திஷ் மக்கள் நாளடைவில் தங்களுக்கு ஒரு தனிநாடு கட்டாயம் வேண்டுமென்று நிச்சயம் கேட்பார்கள் என துருக்கியின் முக்கிய பத்திரிகையான ஹரியட் கூறியிருந்தது. துருக்கியர்களால் குர்திஷ் மக்களுக்கு ஒரு ஆதரவும் கிடைக்கவில்லை 1984இல் ஈராக்கும் துருக்கியும் ஒரு உடன்பாட்டிற்கு வந்தன. இதன்படி குர்திஷ் கிளர்ச்சியாளர்களை ஈராக்கினுள் 10 கி.மீ தூரத்திற்கு பின் தொடர்ந்து அழிக்கலாமென்று துருக்கிக்கு அனுமதி கிடைத்தது துருக்கியர் குர்திஷ் மக்களின் புனித இடங்களை அழித்தனைய டுத்து ஈராக்பாதுகாப்புடன்

குர்திஸ் இனமக்களின் குடிசனப்பரம்பல்




ஆனால் இது சுதந்திரம் அடைவதற்கு ஒரு வழிகாட்டியாக இருந்தது. இந்த ஒப்பந்தத்தின்படி குர்திஷ் மக்கள் கூடுதலாக வாழும் பகுதிகளில் சுயாட்சி வழங்க ஒரு செயற்குழு நியமிக்கும்படியும், குர்திஷ்தான் சுயாட்சிப் பகுதியோடு மோசூல் பள்ளத்தாக்கில் குர்திஷ் மக்கள் வாழும் பகுதியும் விரும்பிச் சேர வழி வகுக்க வேண்டுமெனவும் கூறப்பட்டது.

## குர்திஷ் மக்களின் புரட்சி

1923இல் கிரேக்க மேற்கத்திய வல்லரசு நாடுகளும், புதிய துருக்கியும் செய்து கொண்ட லோசேன் (Lausanne) ஒப்பந்தத்தின்படி, முன்பு செய்து கொண்ட (1920இல்) செவ்றெஸ் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு, ஆமீனியாவும் வடகுர்திஷ்தானும் துருக்கியின் ஆட்சியுடன் இணைக்கப்பட்டது. கூடியவளம்கொண்ட மோசூல் (Mosul) பகுதி ஈராக் அரசுக்கு தேவையென்று பிரித்தானியா தீர்மானித்தது. புதிய துருக்கியின் தந்தை என்ற முஸ்தபா கமால் அத்தாரேக் செவ்றெஸ் ஒப்பந்தத்தை (1920) கிழித்து எறிந்தார். நாகரிகமற்ற காட்டுமிராண்டித்தனமாக (இப்படித்தான் குர்திஷ் மக்களை மேற்குலகம் பார்த்தது) குர்திஷ்ஷுக்குப்பதிலாக புதியமத சார்பற்ற துருக்கி பிறந்ததை மேற்கு நாடுகள் வரவேற்றன. அதிலிருந்துதான் குர்திஷ் மக்கள் புரட்சி ஆரம்பித்தது ஈராக் நச்சுவாயுக்களை குர்திஷ் மக்களின் மேல் பாவித்தும் இப்புரட்சியை அடக்க முடியவில்லை

1946 இல் வட ஈரானில் ஒரு புதிய நாடு அமைப்பதற்கு எத்தனித்தும், சோவியத் ரஷ்யா அதற்கு ஆதரவு அளிக்காததால், ஒரு வருடத்திற்கு பின் அது கைவிடப்பட்டது.

யும் செய்யக் கூடாதென்று முடிவு செய்யப்பட்டது இதன் பிரதிபலிப்பால்திரு.பர்ஷாணி அமெரிக்காவில் தஞ்சம் அடைய சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. அவர் 1979 இல் அங்கு உயிர் நீத்தார்.

1977 இல் இருந்து ஈராக் அரசு குர்திஷ் மக்களுக்காக பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்தது இதனால் குர்திஷ் மக்கள் பிரிவினைவாதிகளிலும் பார்க்க, அரசாங்கத்தின் மேல் கூடிய செல்வாக்கு உண்டாக்க முயன்றது. முஸ்தாபா பர்ஷாணி இறந்ததின் பின் அவரது மகனாகிய மெஸாட் பர்ஷாணி (Massoud Barzani) குர்திஷ் ஜனநாயக கட்சித் (K.D.P) தலைமைப் பீடத்தை ஏற்றுக் கொண்டார் 1980இல் ஈராக்-ஈரான் யுத்தம் ஆரம்பித்ததும் குர்திஷ் மக்களுக்கு ஒரு வாய்ப்புக்கிடைத்திருப்பதைக் கிளர்ச்சித்தலைவர் கண்டார். குர்திஷ் மக்கள் ஈராக்கிய படையில் சேராமல் மலைப் பிரதேசங்களுக்குச் சென்று கிளர்ச்சியாளர்களுடன் சேர்ந்தனர் ஈரான் கிளர்ச்சியாளர்கள் இவர்களோடு சேருவதிலும் பார்க்க, ஈராக்கிலுள்ள சியா முஸ்லிம்களே டுசேர்ந்து சதாம் ஹுசைனை கவிழ்ப்பதற்கு விரும்பினார்கள்,

1985 இல் ஈரான் ஈராக்குடன் தெற்கில் நடந்த யுத்தத்திலிருந்து ஈராக் படையினரை வடக்கே திருப்பிவிட, ஈரான் குர்திஷ் மக்களைப் பயன்படுத்தியது. ஈரான், இளம் வயதினரான மெஸாட் பர்ஷாணிக்கு ஆதரவு கொடுப்பதுடன், ஜலால் தலபாணியையும் தன்பக்கம் ஈர்த்துக் கொண்டது. குர்திஷ் மக்கள் இதுவரை நடத்திராத பயங்கரமான ஒரு கெரில்லா யுத்தத்தை ஈராக்கிற்கு எதிராக நடத்தினார்கள். இதன்பல

பாணி கோபத்துடன் கூறினார்

இதில் குர்திஷ் மக்களின் பிழைகளும் இருக்கின்றன. மேற்கு நாடுகளும், ஈரானும், மற்றவர்களும் குர்திஷ் மக்களின் அபிலாஷைகளைத் (சுதந்திர நாடு) தீர்த்து வைப்பதற்காக ஆசைகாட்டி இவர்களை கைப்பொம்மைகளாக பாவித்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் இவர்கள் ஈராக்கின் உதவியுடன் ஈரானுக்கு எதிராக செயல்பட்டனர். இப்படி குர்திஷ் மக்களின் நிலை மாறி மாறிக் கொண்டேயிருக்கிறது.

## நேரத்திற்கேற்ற தந்திரமான செயல்

அமெரிக்காவின் சி ஐ ஏ. (CIA)யினுடைய மறைமுகமான செயல்களைப் பற்றி, 1976இல் பத்திரிகையாளர் கால்மேயர் ரைம்ஸ் பத்திரிகைக்குக் கொடுத்த அறிக்கை ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன் குர்திஷ் மக்களுக்குச் செய்யும் உதவியை 'நேரத்திற்கேற்ற தந்திரமான செயல்' என்று குறிப்பிட்டிருந்தார். (டமாஸ்கஸ் குர்திஷ் மக்களை துருக்கிக்கு எதிராக பயன்படுத்தியிருக்கிறது) யாராவது இவர்களுக்கு ஒரு சுதந்திரமான நாடு பெற உதவுவார்கள் என குர்திஷ் மக்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

குர்திஷ் மக்கள் மறுபடி ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பதை இன்னும் உணரவில்லை. அப்படி இருந்தால் அதை செயலிலும் காட்டவில்லை. ஆபத்து வரும் நேரங்களில் மட்டும் ஒன்று சேர்ந்து இருப்பதாக காட்டுவதைவிட, உண்மையில் அவர்கள் ஒற்றுமைப் பலத்தைக் காண்பிக்க வேண்டும். அத்தோடு மற்ற நாடுகளை வீழ்த்துவதற்கு இவர்கள் ஒரு விற்பனை ஆயுதமாக மாறுவதை முதலில் தவிர்க்க வேண்டும். தற்போதைய நிலையிலும் அவர்களுடைய வருங்காலம் அவ்வளவு வித்தியாசமானதாக இல்லை. ஈராக்கைச் சுற்றியுள்ள நாடுகளும், மேற்கு நாடுகளும் சேர்ந்து சதாம் ஹுசைனை வீழ்த்துவதற்குத் தான் இவர்களைப் பிரயோசனப்படுத்துவார்கள். இம்முறை இந்நிலைமையை (சதாம் ஹுசைன் வீழ்ச்சி) தங்களுக்குச் சாதகமாகப்பயன்படுத்த முடியும் என குர்திஷ் மக்கள் கூறுகிறார்கள் இவர்களுடைய வாழ்க்கையில் தொடர்ந்து நடப்பதைப் போல் இம்முறையும் இவர்கள் நம்பிக்கைகள் சிதறடிக்கப்படும்.

நன்றி:- புரண்ட்லைன்

# ஈழநாதம்

## சுவிஸில் அகதி முகாம்களுக்கு தீவைப்பு; பலர் காயம்

(சூரிச்)

சுவிற்சலாந்தில் இலங்கை அகதிகள் உட்பட வெளிநாட்டு அரசியல் தஞ்சம் கோரியோர் தங்கியுள்ள அகதி முகாம்கள் இனந்தெரியாதவர்களினால் தீவைத்து நாசமாக்கப்பட்டு வருகின்றன.

இத் தீவைப்பால் பலர் இறந்தும், படுகாயமடைந்தும் உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் ''பேர்ன்'' மாநிலத்தில் ''தூண்'' என்ற இடத்தில் முகாமொன்றுக்கு நள்ளிரவில் தீவைக்கப்பட்டது எனினும் அங்கு தங்கியிருந்த இலங்கையர் உட்பட 58 பிற நாட்டவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் கபர் மாநிலத்தில் நடைபெற்ற இதுபோன்ற சம்பவமொன்றில் இரு குழந்தைகள் உட்பட நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை ''வாசல்'' மாநிலத்தில் ''என் சென்ஸ்ரீன்'' என்ற இடத்தில் இடம்பெற்றுள்ள மற்றுமோர் தாக்குதலில் துருக்கிக் குடும்பமொன்று காயமடைந்துள்ளது. இச்சம்பவம்நடைபெற்ற சிலமணித்தியாலங்களுக்குப் பின் இதே நகரில் மற்றுமோர் முகாமும் தீக்கிரையாக்கியதில் இலங்கை வாலிபரொருவர் காயமுற்றுள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன் 'சூரிச்' மாநிலத்திலுள்ள முகாம் ஒன்று தாக்கப்பட்டுள்ளதாகவும், இதே போன்று ஒன்பது முகாம்கள் தாக்கப்பட்டதாகவும் சுவிஸ் பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது

பிற நாட்டவர்கள் சுவிஸில் தங்கியிருப்பதை விரும்பாதவர்கள் தான் இத்தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் போத்தல் வடிவிலான தீப்பற்றக்கூடிய பொருள் ஒன்றே முகாம்கள் மீது வீசப்பட்டுவருவதாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன'

## சுவிஸ்சலாந்து அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர்

(சூரிச்)

சுவிற்சலாந்தில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருந்த அகதிகள் சிலரின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட அதே நேரம் அகதிகள் சிலரும் அங்கிருந்து வெளியேற்றப் படுகின்றனர்.

இவ்வாறு வெளியேற்றப் படும் அகதிகளில் இலங்கையர்களும் அடங்குவர் எனவும் கூறப்படுகின்றது. இவர்கள் குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதெனவும் கூறப்படுகிறது.

## பாடசாலை அபிவிருத்தி கலந்துரையாடல்

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்திலுள்ள சிறிய பாடசாலைகளின் அபிவிருத்தி சம்பந்தமான ஆய்வும் கலந்துரையாடலும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. கல்வித் திணைக்களத்தின் முகாமைத்துவப் பிரிவு ஏற்பாடு செய்யும் இக் கலந்துரையாடலில் சிறிய பாடசாலை அதிபர்கள், கொத்தணி அதிபர்கள், கோட்டக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், சமூக நிறுவனங்கள், உதவி அரசாங்க அதிபர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலும் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தியாகி திலீபன் நினைவாக

## உண்ணா விரதமும் நினைவுக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட இடமான நல்லூர் வீதியில் நாளையும், நாளை மறுதினமும் மாபெரும் உண்ணாவிரதமும் நினைவுக் கூட்டங்களும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. காலை எட்டு மணி தொடக்கம் பி.ப. நான்கு மணிவரை உண்ணாவிரதமும் மாலை ஆறு மணி தொடக்கம் இரவு 10-30 வரை கூட்டங்களும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன,

நாளை நடைபெறவுள்ள நினைவுக் கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் வலிகாமம் பொறுப்பாளர் செல்வி மலர்கொடி தலைமை வகிப்பார். இக்கூட்டத்தில் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் வடமராட்சிப் பொறுப்பாளர் திரு அரசண்ணா, மூத்த உறுப்பினர் திரு: தேவர் அண்ணா, விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி பாரதி, செல்வி மாலினி ஆகியோர் உரையாற்றுவார்கள். (மு)

## உண்ணாவிரதம்

திலீபனின் நான்காவது தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பந்தல்கள் அமைக்கப்பட்டு சுழற்சியான முறையில் உண்ணாவிரத நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன.

பிரதேச ரீதியாக பொதுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இன்று (23-ம் திகதி) ஒட்டிசுட்டானிலும் நாளை மறுதினம் (25-ம் திகதி) புதுக்குடியிருப்பிலும் எதிர்வரும் 26-ம் திகதி நெடுங்கேணியிலும் கூட்டங்கள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (58)

## அநுராதபுரம் நோக்கி சிங்கள மக்கள் இடம்பெயர்வு

(கொழும்பு)

தென் இலங்கையில் நிலவி வரும் நெருக்கடி நிலையைத் தொடர்ந்து அங்கு குழப்பங்கள் தோன்றலாம் எனக் கருதி சிங்கள மக்கள் அநுராதபுரம் நோக்கி புலம் பெயர்வதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாளை செவ்வாய்க்கிழமை கூடவிருக்கும் பாராளுமன்றக் கூட்டத் தொடரை அடுத்து கலவரம் ஒன்று தோன்றலாம் என்ற ஐயப்பாட்டிலேயே தென் இலங்கை சிங்கள மக்கள் அநுராதபுரம் நோக்கி இடம் பெயர்கின்றனர்.

## பாடசாலை மட்டத்தில் பல்வேறு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் நினைவாக யாழ். மாவட்டப் பாடசாலைகள் மட்டத்தில் கவிதை கட்டுரைப் போட்டிகள், சிரமதானங்கள், நினைவஞ்சலிக் கூட்டங்கள் ஆகியன இடம் பெற்று வருகின்றன.

நாளைய தினம் சென் ஜேம்ஸ் பாடசாலை, வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் பாடசாலை, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளிலும், நாளை மறுதினம் யாழ். இந்துக் கல்லூரியிலும் தியாகி திலீபன் நினைவுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன

இவற்றிலும் நல்லூர் வீதியில் நடைபெறவுள்ள உண்ணாநோன்பிலும் தவறாது பங்கெடுக்குமாறு யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் சகல மாணவர்களையும் கேட்டுள்ளது.

### தமிழர் பிரச்சினையின்

★ போராளி அணியினரை ஆயுதப் படைகளில் சேர்த்துக் கொள்ளும்போது மேற்கூறிய நடைமுறை கவனத்திற் கொள்ளப்படும்

### திட்டமிடலும் பொருளாதார விவகாரங்களும்

★ மாகாண திட்டமிடல் ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கு மாகாண அரசுக்கு அதிகாரமுண்டு

★ மாகாண திட்டமிடல் ஆணைக்குழுவின் அமைப்பையும், அதற்கான உறுப்பினர் தெரிவையும் மாகாண அரசின் அமைச்சர் அவை தீர்மானிக்கும்

★ ஆணைக்குழுவின் தலைவர் முதலமைச்சருக்கும் பொறுப்பானவராகும்

### நிதி ஒழுங்குகள்

★ மத்திய அரசின் திரட்டிய நிதியிலிருந்து யாப்பில் வரையறுக்கப்பட்ட தொகை நிதி மாகாண சபையின் நிதிக்கு வழங்கப்படும்

★ வருடாந்த வரவு செலவுத் திட்டம் அல்லது தேசிய மொத்த உற்பத்தி அடிப்படையின் விகிதத்தில் மாகாண அரசுக்கான நிதி வழங்கலின் அளவு தீர்மானிக்கப்படும்

★ வெளிநாட்டு உதவிக்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள மாகாண அரசுக்கு அதிகாரமுண்டு

### ஆளுநர் மற்றும் அமைச்சர்கள் அவை

★ மாகாண முதலமைச்சரின் சம்மதத்துடன் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான ஆளுநர் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவார்.

★ ஜனாதிபதியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கும் வரை ஆளுநரின் பதவிக்காலம் அமையும்.

★ முதலமைச்சரின் தலைமையிலான ஓர் அமைச்சரவை இருக்கும்.

★ வட-கிழக்கு மாகாணத்தின் அமைச்சரவையின் அமைப்பு பத்துப்பேரைக் கொண்டதாக மட்டுப்படுத்தப்படும்.

★ அமைச்சரவை மாகாணசபைக்குப் பொறுப்பாக இருப்பதோடு பதில் சொல்லவும் கடமைப்பட்டவர்கள்.

### கல்வியும் கல்விச்சேவைகளும்

★ அனைத்து அரசாங்கப் பாடசாலைகளுக்கும் வசதிகளை வழங்குதல், புதிய பாடசாலைகளைத் தோற்றுவித்தல், நிர்வகித்தல், மேற்பார்வையிடுதல்.

★ திட்டங்களை வகுத்தலும், நடைமுறைப்படுத்தலும்

★ தேசிய கல்வி நிறுவனத்தின் வழிகாட்டலுக்கு அமைய பாடவிதானங்களை வகுத்தலும், பாடவிதானங்களை அபிவிருத்தி செய்தலும்.

## வருடாந்த மஹோற்சவம்

அச்செழு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இம் மாதம் ஒன்பதாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது இன்று தேர்த்திருவிழவும் அதனையடுத்து தீர்த்த உற்சவமும் மற்றும் பூங்காவனம் போன்ற திருவிழாக்களும் நடைபெறவுள்ளன.

### ஜனாதிபதி

முதலி கூறியுள்ளார்.

### 17 துப்பாக்கி

புலிகளுக்கு பிரேமதாசா சக்திவாய்ந்த தொலைத்தொடர்புக் கருவிகளை வழங்கியதோடு பதினேழு விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளையும் வழங்கி உள்ளார்.

ரி. என் ஏ. எனப்படும் தமிழ் தேசிய இராணுவத்திடம் விமானங்களே இருக்கவில்லை. இந்த நிலையில் எதற்காக பிரேமதாசா புலிகளுக்கு விமான எதிர்ப்பு துப்பாக்கிகளை வழங்கவேண்டும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆதாரம் ...

### இராணுவச் செலவைக்

## குறைத்தால் மட்டுமே பாகிஸ்தானுக்கு நிதியுதவி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தனது இராணுவச் செலவுகளை குறைத்துக் கொண்டால் தான் கடன் வழங்குவோம் என்ற சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையை பாகிஸ்தான் நிராகரித்து விட்டது.

எதிர்காலத்தில் பாகிஸ்தான் இந்த நிதியத்திடம் இருந்து கடன் பெற வேண்டுமானால் பாதுகாப்புச் செலவை ஒன்பது சத வீதம் குறைத்துக் கொள்ள வேண்டும் என நவாப்ஷெரீப் அரசாங்கத்தை இந்த நிதியம் கேட்டிருந்தது.

ஆனால் இந்த நிதியத்தின் யோசனையை ஏற்க முடியாது என பாகிஸ்தான் தெரிவித்தது.

இதனால் முன்பு இந்த நிதியத்தால் அனுமதிக்கப் பட்ட கடனின் 25 கோடி டொலர் கிடைப்பது பாதிப்படையக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## 1 கோடி 30 லட். ரூபா கடத்தல் தங்கம் பிடிபட்டது

ஒரு கோடியே முப்பது லட்சம் பெறுமதியான இருநூறுக்கும் அதிகமான தங்கப்பாளங்களை கடத்தி வந்த இந்யதிப் பிரஜையொருவரை கட்டுநாயக்கப் பகுதியினர் கண்டு பிடித்துள்ளனர்.

இவர் தனது இடையில் இந்த தங்கப்பாளங்களை மறைத்து வைத்திருந்தார் எனவும் இவருக்கு நான்கு கோடிரூபா அபராதம் விதிக்கப்படலாம்.

## லெப். கேணல் சந்திரனின் 1 ஆம் ஆண்டு நினைவு நாள்

கொக்காவில் இராணுவ தகர்ப்பின் போது காயமடைந்த லெப். கேணல் சந்திரன் உட்பட பத்து வீர வேங்கைகளும், மூன்று படகோட்டி ஆதரவாளர்களும் வீரமரணம் ...ற்படையினருடனான மோதலின் போது கடந்த ... செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி வீரமரணமடைந்தார்.





### தென் ஆபிக்காவில்

## இராணுவத்தின் சூட்டிற்கு இரு இலங்கையர் பலி

(கொழும்பு)

டனர் என்றும் இவர்களுக்கி ...

ணுவச் செலவுகளை குறைத்துக் கொண்டால் தான் கடன் வழங்குவோம் என்ற சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையை பாகிஸ்தான் நிராகரித்து விட்டது.

எதிர்காலத்தில் பாகிஸ்தான் இந்த நிதியத்திடம் இருந்து கடன் பெற வேண்டுமானால் பாதுகாப்புச் செலவை ஒன்பது சத வீதம் குறைத்து இந்த நிதியம் கேட்டிருந்தது.

ஆனால் இந்த நிதியத்தின் யோசனையை ஏற்க முடியாது என பாகிஸ்தான் தெரிவித்தது.

இதனால் முன்பு இந்த நிதியத்தால் அனுமதிக்கப் பட்ட கடனின் 25 கோடி டொலர் கிடைப்பது பாதிப்படையக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தென் ஆபிக்காவில்

# இராணுவத்தின் சூட்டிற்கு இரு இலங்கையர் பலி

(கொழும்பு)

தென் ஆபிரிக்காவில் இரு இலங்கைத் தமிழர்கள் தென் ஆபிரிக்க இராணுவத்தினரின் சூட்டிற்குப் பலியாகியுள்ளார்கள் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு பொறியியலாளர்கள் தென் ஆபிரிக்க இராணுவச் சிப்பாய் ஒருவரால் கடந்த வாரம் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் இவர்களுக்கிடையே ஏற்பட்ட வாக்கு விவாதத்தின் முடிவிலேயே இராணுவச் சிப்பாய் இவர்களைச் சுட்டுக் கொன்றதாகவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலியைச் சேர்ந்த ரகுபதி ஜெனகன் (25) இளவாலையைச் சேர்ந்த ரி. கதிர்காமநாதபிள்ளை (43) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

# இல. அகதிகள் சுமை தாங்கமுடியாதுள்ளது

- நரசிம்மராவ்

(டில்லி)

இலங்கைத் தமிழ் அகதிகளின் சுமை தாங்கமுடியாத அளவிற்கு கஷ்டமாகி வருவதாக இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய நரசிம்மராவ் இலங்கை பற்றிக் குறிப்பிடும் போது "இலங்கையுடனான இந்தியாவின் உறவுகள் அபிவிருத்தி அடையும் ஒரு நிலையில், அகதிகளின் பிரச்சினை சமாளிக்க முடியாமல் இருப்பதாக" த்தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் பிரச்சினையும், அகதிகள் தொடர்புபட்ட விடயமுமே கஷ்டங்களைத் தமக்குத் தந்துள்ளன என்றும் நரசிம்மராவ் தெரிவித்தார்.

# வருடம் 1 கோடி 70லட் இந். குடிச. அதிகரிப்பு

(பாரிஸ்)

இந்தியாவின் சனத்தொகை ஒருவருடத்திற்கு ஒருகோடியே எழுபது லட்சம் மக்கள் என்ற ரீதியில் பெருக்கமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாரிஸில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தியாவின் உதவும் நாடுகளின் கூட்டத்தில் இந்தப் புள்ளி விபர அறிக்கை அறிவிக்கப்பட்டது.

மேற்குத்தேச கொடை வழங்கும் நாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண உடனடியாக உதவும்படி அந்த நாடுகள் கேட்டுள்ளன.

இந்த விகிதத்தில் சனத்தொகை பெருக்கமடைந்தால் அடுத்த ஐந்து வருடங்களில் சீனாவின் சனத்தொகையையும் இந்தியா மிஞ்சி விடும் என்றும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

### வீரவணக்கம்

அருள் கிளிவெட்டி, மூதூர்) ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பிடித்துள்ளனர்.

# லெப். கேணல் சந்திரனின் 1 ஆம் ஆண்டு நினைவு நாள்

கொக்காவில் இராணுவ தகர்ப்பின் போது காயமடைந்த லெப். கேணல் சந்திரன் உட்பட பத்து வீர வேங்கைகளும், மூன்று படகோட்டி ஆதரவாளர்களும் வீரமரண



லெப்.கேணல் சந்திரன்

மடைந்த ஓராண்டு நினைவு நாள் இன்றாகும்.

வன்னிப்பிராந்திய அரசியல் பொறுப்பாளர் லெப்.கேணல் சந்திரன் கொக்காவில் இரா




கப்டன் நிவாஸ்

ணுவ முகாம் தகர்ப்பின் போது காயமடைந்து பின்னர் சிகிச்சைக்காக தமிழகம் செல்லும் வழியில் தமிழீழ கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடனான மோதலின் போது கடந்த ... செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி வீரமரணமடைந்தார்.



மேஜர் அரவிந்தன்

இவர்களுடன் மேஜர் யப்பான், மேஜர் அரவிந்தன், கப்டன் நிவாஸ், ஆகியோரும் சிகிச்சைக்காக தமிழகம் சென்



மேஜர் யப்பான்

று கொண்டிருந்த போது வீரமரணமடைந்தனர். இவர்களுடன் வீரவேங்கைகள் நுட்வின், நரேன், ரமணிதரன், அலிஸ், சைமன், சோமேஸ் ஆகியோரும் படகோட்டிகளான லிங்கம், பொன்ராசா செல்வராசா ஆகியோரும் வீரமரணமடைந்தனர்.

---

வன்னிப்பிராந்திய அரசியல் பொறுப்பாளர்

## லெப். கேணல் சந்திரன்

ஓராண்டு நினைவாக நடாத்தப்பட இருந்த (22-9-91) கரபந்தாட்ட விளையாட்டுப் போட்டியும், நினைவஞ்சலிக் கூட்டமும் எதிர்வரும் 28,, 29 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

தலைவர்
மறுமலர்ச்சிக் கழகம்
முள்ளியவளை.

(B/3168)

---

கிழக்கு மாகாணத்திற்கான ஆளுநர் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவார்.

★ ஜனாதிபதியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கும் வரை ஆளுநரின் பதவிக்காலம் அமையும்.

★ முதலமைச்சரின் தலைமையிலான ஓர் அமைச்சரவை இருக்கும்.

★ வட-கிழக்கு மாகாணத்தின் அமைச்சரவையின் அமைப்பு பத்துப்பேரைக் கொண்டதாக மட்டுப்படுத்தப்படும்.

★ அமைச்சரவை மாகாணசபைக்குப் பொறுப்பாக இருப்பதோடு பதில் சொல்லவும் கடமைப்பட்டவர்கள்.

### கல்வியும் கல்விச்சேவைகளும்

★ அனைத்து அரசாங்கப் பாடசாலைகளுக்கும் வசதிகளை வழங்குதல், புதிய பாடசாலைகளைத் தோற்றுவித்தல், நிர்வகித்தல், மேற்பார்வையிடுதல்.

★ திட்டங்களை வகுத்தலும், நடைமுறைப்படுத்தலும்

★ தேசிய கல்வி நிறுவனத்தின் வழிகாட்டலுக்கு அமைய பாடவிதானங்களை வகுத்தலும், பாடவிதானங்களை அபிவிருத்தி செய்தலும்.

★ தேசிய கல்விக் கொள்கைக்கு இடையூறு செய்யாத வகையில் பாடநூல்களைத் தயாரித்தலும் விநியோகித்தலும்

### உயர்கல்வி

★ பல்கலைக்கழகங்கள் பாராளுமன்றத்தினால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று சட்டத்தின் மூலம் பிரகடனம் செய்யப்பட்டவை தவிர பாடசாலைக் கல்விக்கு மேற்பட்ட பயிற்சிகளும், பிரதேச தொழில்நுட்ப நிறுவனங்களும் பட்டம் வழங்கும் நிறுவனங்களும்.

### சுகாதாரம்

★ பொது வைத்தியசாலைகள், போதனா வைத்தியசாலைகள் ஆகியவற்றை தோற்றுவிக்கவும் நிர்வகிக்கவும் அவற்றிக்கான நியமனம் மேற்கொள்ளல் உட்பட தனியார் மருந்தகங்கள் மருந்துச்சாலைகளை ஒழுங்கு படுத்துதல் மருந்துவ துறையினரால் பயிற்றுவித்தல்.

★ மற்றும் அளவைகள், காட்டுவளம், நீர்ப்பாசனம், விவசாயம், மாற்று சிகிச்சைகள், நிவாரணமும், புனர்வாழ்வும், சுற்றுலாத்துறை, கனிய வளங்கள் மற்றும் சுரங்கங்கள், சக்தி, துறைமுகங்களும் சிறிய துறைகளும், தகவல் தொடர்பு வீடமைப்பு, நகரத்திட்டமிடல், பெருந்தெருக்கள், போக்குவரத்து என்பன சம்பந்தப்பட்ட துறைகளில் செலுத்தப்படக்கூடிய அதிகார வரம்பு பற்றியும் கூறப்பட்டுள்ளது

---

### புலிகள்

செய்தபிறகு அங்கு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நீதிபதிகள் தமது இறுதி தீர்ப்பை வழங்குவர்

---

க. பொ. த.

கொழும்பில் நடைபெறவிருக்கும் சார்க் உச்சிமாநாட்டையொட்டி இப் பரீட்சை முன்கூட்டியே நடைபெறலாம் என்று பெற்றோர்கள் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஐயப்பாட்டை போக்குமுகமாகவே இதனைத் தெரித்ததாகவும் ஆதர் வெத முல்ல குறிப்பிட்டார்.

### அமைச்சரவை இன்று

இட ஒதுக்கீடு குறித்து ஆலோசனை நடத்துவதற்காக நேற்றுக் கூடவிருந்த இந்திய அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று புதுடில்லியில் இதனை அறிவித்த அரசியல் உயர் அதிகாரி நேற்று முன்தினம் பிரதமர் நரசிம்மராவ் இது குறித்து அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிவித்தார்.

---

## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ து)

### அறிவித்தல்

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலுக்காக அங்கத்தவர் அட்டவணை 31-12-1991 உடன் மூடப்படவிருக்கின்றது. அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் தங்கள் தங்கள் கிளைகள் மூலம் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

-செயலாளர்

(B/3167)

---

ஜனாதிபதி முதலி கூறியுள்ளார்.

### 17 துப்பாக்கி

புலிகளுக்கு பிரேமதாசா சக்திவாய்ந்த தொலைத்தொடர்புக் கருவிகளை வழங்கியதோடு பதினேழு விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளையும் வழங்கி உள்ளார்.

ரி. என் ஏ. எனப்படும் தமிழ் தேசிய இராணுவத்திடம் விமானங்களே இருக்கவில்லை. இந்த நிலையில் எதற்காக பிரேமதாசா புலிகளுக்கு விமான எதிர்ப்பு துப்பாக்கிகளை வழங்கவேண்டும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

### ஆதாரம் சமர்ப்பிப்போம்

அத்துலத்முதலி மேலும் தனது கோரிக்கைகளில் ஜனாதிபதி பிரேமதாசா புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய குற்றச்சாட்டை விசாரிக்க ஒரு ஆணைக்குழு நியமித்தால் அந்தக் குழுவிடம் அதற்கு தகுந்த ஆதாரங்களை சமர்ப்பிக்கத் தயார். புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய விடயம் பற்றி பிரேமதாசா அமைச்சரவையிடமோ நாடாளுமன்றத்திடமோ இது வரை கூறவில்லை. இது அரசியல் சட்டத்துக்கு எதிரானதொன்றாகும் என்று அத்துலத் முதலி குறிப்பிட்டுள்ளார்.

### விலக்கிக்கொள்ள் வேண்டுகோள்

இதற்கிடையில் சிறிலங்கா அரசியல் சட்டத்தை திருத்தி அமைக்க ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கிறது இதற்காக பிரேமதாசாவுக்கு எதிரான பதவி நீக்கல் தீர்மானத்தை எதிரணியினர் விலக்கிக் கொள்ள வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சி தம்மைக் கேட்டுக் கொண்டதாகவும் அத்துலத் முதலி தெரிவித்தார்.

### சர்வஜன வாக்கெடுப்பு

ஆனால் இத்தகைய உறுதி மொழிகளைக் கேட்டு தாம் ஏமாறத் தயாரில்லை என்றும் பிரதமரின் கையில் அதிக அதிகாரம் கொண்ட பாராளுமன்ற முறையை மீண்டும் அறிமுகப்படுத்த நாட்டின் ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முன்வர வேண்டும் என்பதே தனது கோரிக்கை என்றார் அத்துலத்முதலி.

எவ்வாறு இருப்பினும் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான விசாரணை மனுபற்றி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். என்பதை நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறப்போகும் பாராளுமன்ற கூட்டத்தொடரில் தாம் கேட்டுக்கொள்ளப் போவதாகவும் தெரிவித்தார்.